09.01.2025 அ.வ. எண். 141/2017 பி.சா.1 விசாலாட்சி

குறுக்கு விசாரணை

நான் புதுப்பாளையத்தில் வசித்து வருகிறேன். தாவா சொத்து ஆலத்தூர் கிராமத்தில் உள்ளது. என் தாயார் பெயர் குள்ளியம்மாள், தகப்பனார் பெயர் கன்னி கவுண்டர். என் பெற்றோர்களுக்கு நான், வெங்கடேசன், அமராவதி வாரிசுகள். வெங்கடேசனின் மனைவி தான் எல்லம்மாள். தாவா சொத்து ஆரம்பத்தில் அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்டதாகும். என் தாயார் பெயரிலும், அண்ணன் பெயரிலும் பட்டா கொடுத்தார்கள். எதிர்வழக்குரையில் முதலில் எல்லம்மாள் பெயரில் பட்டா கொடுத்ததாகவும் பிறகு என் தாயார் பெயருக்கு பட்டா கொடுத்ததாகவும் சொல்லிவிட்டு தற்போது மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சொத்து சம்மந்தமாக என் தாயாருக்கும் எல்லம்மாளுக்கும் பிரச்சனை இருந்தது. என் தாயார் பெயரிலும் என் பெயரிலும் வாதி வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான், அதற்கு முன்பாகவே நான் கிரயம் வாங்கிவிட்டேன். எல்லம்மாளுக்கும் என் தாயாருக்கும் பிரச்சனை ஏற்பட்டதால் பெயரளவிற்கு என் தாயார் என் பெயருக்கு கிரய ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றால் அதற்கு முன்பாகவே நான் கிரயம் வாங்கிவிட்டேன். எல்லம்மாள் அனுபவிப்பதை நானும் என் தாயாரும் தடைசெய்யக்கூடாது எனவும், பட்டா செல்லாது எனவும் தீர்ப்பு வந்தது என்றால் சரிதான். குள்ளியம்மாள் 2016 ஆம் ஆண்டு இறந்துவிட்டார். அதன்பிறகு வாதிக்கும் எனக்கும் சொத்து சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல, நானும் அவரை பார்த்ததில்லை அவரும் என்னை பார்த்ததில்லை. எனக்கும் வாதிக்கும் பிரச்சனை ஏற்பட்டபோது 2006 ஆம் ஆண்டு நான் கிரயம் வாங்கியதாக சொன்னேன் என்றும் அதன்பிறகு தான் வாதிக்கு கிரய ஆவண விவரம் தெரியவந்தது என்றால் சரியல்ல. அப்போது தான் நான் 2014 ஆம் ஆண்டு 2ம் பிரதிவாதிக்கு கிரயம் செய்த விவரம் தெரியவந்தது என்றால் சரியல்ல. குள்ளியம்மாள் அவர் பெயருக்கு மாற்றப்பட்ட பட்டாவின் அடிப்படையில் தான் எனக்கு கிரயம் செய்தார். பட்டாவே செல்லாது என்றும் அதனடிப்படையில் நான் பெற்ற கிரயமே செல்லாது

என்றால் சரியல்ல. 2014 ஆம் ஆண்டு 2ம் பிரதிவாதிக்கு செய்த கிரயம் செல்லாது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் மாட்டு கொட்டகை உள்ளது. வாதி வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு அறிவிப்பு அனுப்பினார் என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் வாதி ஆலத்தூர் கிராம நிர்வாக அலுவலருக்கு அறிவிப்பு அனுப்பியதாக சொல்லியுள்ளேன் என்றால் ஞாபகமில்லை. வாதி எந்த வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பியிருந்தார் என்று தெரியாது. எதிர்வழக்குரையில் தவறான சங்கதிகளை கூறி வழக்கு காலவரம்பு சட்டத்தின்படி பாதிக்கப்படுவதாக தவறாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. வாதிக்கும் என் தாயாருக்கும் பிரச்சனை இருந்தது தெரிந்தே என் தாயார் எனக்கு கிரயம் கொடுத்து நான் 2ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்துள்ளேன் என்றால் நான் வெளியூரில் இருப்பதால் கிரயம் கொடுத்துவிட்டேன். இரண்டு கிரய ஆவணங்களும் பெயரளவிற்கு ஏற்பட்டது என்றும் கிரய மறுபயன் எதுவும் இல்லை என்றும் வாதியை ஏமாற்றுவதற்காக ஏற்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. பி.சா.ஆ.1 தவறாக வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. பி.சா.ஆ.2 வழக்கிற்காக நான் தயார் செய்துகொண்டது என்றால் தவறு. பி.சா.ஆ.3 நடைமுறைக்கு வராத ஆவணம் என்றும் வாதியை கட்டுப்படுத்தாது என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்து வாதிக்கு சொந்தமானது என்றும் வழக்கு நடந்தபோது சொத்தை ஆக்கிரமிப்பு செய்துகொண்டேன் என்றும் அதனால் வாதி வழக்கில் கோரியவாறு வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை

இல்லை.